## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 31.01.2023 | DW1 |
|---|---|---|
| Name: இந்திரஜித் | S/o. பெருமாள் கவுண்டர் | |
| Evidence Recorded Time: 05.11 P.M. to 05.20 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

என்னிடம் காட்டப்படும் பத்திரம் 1971–ம் ஆண்டு பாகப்பத்திரத்தின் அசல் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.15 ஆகும். மேற்படி வா.சா.ஆ.15 பத்திரத்தில் உள்ள அலமேலுவின் கையெழுத்தும் நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ–1 சம்மதப்பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் வேறுபட்டு உள்ளது என்றால் சரிதான். அலமேலு 1973–ல் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தோடு ஒப்பிட்டு பார்த்தால் தெரியும். எங்களின் அசல் கிரைய பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வேறு ஒரு வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண்.158/1 பி யின் குறுக்கே உயர் அழுத்த மின் பாதை செல்கிறது என்று கூறியுள்ளேன், அது எந்த வருடம் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் அம்மா பெயரில் கிரையம் வாங்கும்போதே அந்த உயர் அழுத்த மின் பாதை இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு மின் பாதை செல்வதை காரணம் காட்டி எங்களுக்கு சம்மத பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உரிமையே இல்லாத அலமேலு எங்களுக்கு 27 1/2 செண்ட் நிலம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் நிலத்திற்கு நான்கு பக்கமும் எங்கள் நிலம்தான் உள்ளது என்றால் சரிதான். வாதியை மிரட்டி சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் கேட் அமைப்பது, அதிகப்படியான நிலத்திற்கு பட்டா பெற்றது, இந்த நிலத்தை பூட்டிவிட்டால் எனக்கு விற்றுவிடுவார்கள் என்ற எண்ணத்தில்தான் நான் இவ்வாறு செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் நிலத்தை 21 1/2 செண்ட் நிலத்தை என்னுடைய நிலத்தின் பட்டாவோடு சேர்த்துக்கொண்டு ஆக்கிரமிப்பு செய்ததால் சட்டப்படி தடுக்கவேண்டும் என்ற காரணத்தினால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எனவே வாதி கோரியவாறு இந்த வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.